# *‘நாங்கள் கேட்டவை’*
# றொறன்ரோ வாழ் சமூகத்தினரின் கலந்துரையாடல் – சுருக்கம்

**ஜூன் 19, 2023**

CAMPAIGN 2000 END CHILD & FAMILY POVERTY

FAMILY SERVICE TORONTO
For People. For Change.

# அறிமுகம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்த அனுபவமுள்ள 12 தமிழ்ப் பெண்களுடன் ரொறன்ரோ, ஒன்ராறியோவில் இடம்பெற்ற சமூகக் கலந்துரையாடலின் முக்கிய கருப்பொருட்களை நாங்கள் கீழே சுருக்கமாக வழங்கியுள்ளோம்.

இந்தக் கலந்துரையாடல், *Family Service Toronto* இன் VAW மற்றும் சமூகச் செயற்பாட்டுக் குழுக்களால் நடத்தப்பட்டது. தேசிய மற்றும் ஒன்ராறியோ அலுவலகங்களின் *பிரச்சாரம் 2000* ஐ சமூக நடவடிக்கைத் திட்டம் நடத்துகிறது: *சிறுவர் மற்றும் குடும்ப வறுமையை முடிவுக்குக் கொண்டுவரல்*.

கலந்துரையாடல் தலைப்புகளின் அடிப்படையில், இந்தச் சுருக்கம் நான்கு பிரிவுகளாக உள்ளது. ஒவ்வொரு தலைப்பிற்கும் அதனுடன் தொடர்புடைய உள்ளடக்கம் மற்றும் மேற்கோள்களுடன் கூடிய முக்கிய கருப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. சமூகம் சார்ந்த காட்டிக் கட்டமைப்பையும், நடவடிக்கைக்கான பரிந்துரைகளையும் உருவாக்க உதவுவதற்காக, நாடு முழுவதும் நிகழ்த்தப்படும் பிற உரையாடல்களின் உள்ளடக்கத்துடன், அடுத்த ஆண்டு இந்த உரையாடல் உள்ளடக்கம் மேலும் பகுப்பாய்வு செய்யப்படும்.

கலந்துரையாடல் தமிழில் நடத்தப்பட்டு, பின்னர் சுருக்கமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. வறுமை மற்றும் பாகுபாடுகளை அனுபவிப்பவர்களின் உணர்ச்சிகரமான மற்றும் பேசுவதற்குக் கடினமான தலைப்புகளைக் கொண்ட உரையாடலின் உள்ளடக்கம் மற்றும் உணர்ச்சிகளை விளங்கிக்கொள்ள முயற்சித்தோம், மேலும் அது இங்கே வழங்கப்பட்டுள்ளவற்றில் வரக்கூடும்.

இது 'நாங்கள் கேட்டவை' சுருக்கம் என்பதால், பங்கேற்பாளர்கள் பகிர்ந்துகொண்டதைக் கேட்டு, இங்கே அவற்றைப் பிரதிபலிக்கின்றோம். இவற்றைக் கருத்தில் கொண்டு, பிரச்சாரம் 2000 இன் பெறுமானங்கள் அல்லது நிலைப்பாட்டுடன் இணையாத உள்ளடக்கம் இங்கே வழங்கப்பட்டிருக்கலாம் என்பதையும் கவனியுங்கள்..

வாடகை, உணவு, குழந்தைப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டிய அவசரத் தேவை கலந்துரையாடலில் தெளிவாகத் தெரிந்தது. மொழி தடையாக இருப்பதன் தாக்கம், தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தல், வாடகைச்

செலவுகள் மிக அதிகமாக இருப்பதால், போதுமான உணவு கிடைப்பதில் சிரமங்கள் உள்ளடங்கலாக வேலை வாய்ப்பு, குடியிருப்புச் சவால்கள் மற்றும் பாகுபாடு ஆகியவற்றில் உள்ள சவால்கள் பகிரப்பட்டன, இதில். தமிழ்ப் பெண்கள், குறிப்பாக ஒற்றைத் தாய்மார் என்ற வகையில் தாங்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட பாகுபாடுகள் மற்றும் சவால்களைப் பங்கேற்பாளர்கள் வெளிப்படுத்தினர், ஆனால் தமிழ்ப் பெண்கள் சமூகத்தின் முக்கிய பலங்களில் ஒருவர் என்பதையும் வலியுறுத்தினார்கள்.

## ஒரு வறுமை இல்லாத சமூகம் கொண்டிருப்பது …

*நல்வாழ்வு*

- மகிழ்ச்சி: அனைவரும் சந்தோஷமாக இருப்பது
- ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுடன் நீங்கள் விரும்பியபடி வாழக்கூடியதாக இருப்பது: “வறுமை இல்லாவிட்டால், நாம் விரும்பியபடி வாழலாம், உணவு மற்றும் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு பற்றாக்குறை இருக்காது.”

*சமத்துவம்*

- பாலின சமத்துவம்
- வருமான மற்றும் செல்வச் சமத்துவம்: “பணக்காரரும் இல்லை, ஏழையும் இல்லை.”

*அடிப்படைத் தேவைகள் பூர்த்தி*

- வருமானம்
  - சிறந்த அடிப்படை வருமானம்
  - நிதி வரம்புகளுக்குள் வாழத் தேவையில்லை
  - பணத்தைச் சேமித்துத் தேவைக்கேற்றபடி செலவழிக்கும் திறன்
- கல்வி மற்றும் வேலை
  - சிறந்த தரமுள்ள கல்வி
  - அனைவரும் வேலை செய்ய முடியும் மற்றும் அவர்களின் தேவைகளைச் சமமாகப் பூர்த்திசெய்ய முடியும்
  - இலவசப் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி
- உணவு: அனைவருக்கும் போதிய உணவு கிடைத்தல்
- குடியிருப்பு: வீடுகள் சிறப்பான காற்றோட்டம் உள்ளவையாக இருக்கும் மற்றும் அனைவருக்கும் போதுமான இடம் இருக்கும்

*குழந்தைகளின் உரிமைகள் உணரப்படுதல்*

- ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் உணவுப் பாதுகாப்பு: “வறுமை இல்லாவிட்டால், சத்தான உணவைக் கொடுத்து நல்ல நடத்தையுடனும் ஆரோக்கியத்துடனும் குழந்தைகளை வளர்க்கலாம்.”
- சிறுபராயத் திருமணம் இல்லை

## தமிழ்ப் பெண்களாக வறுமை தொடர்பான அனுபவங்கள்

*அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமை*

- அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஒரு போராட்டம்: “வறுமை எல்லா வகையிலும் பாதிக்கிறது.”
- உணவு அல்லது உடைகள் வாங்க முடியாமல் உணவு அல்லது துணி வங்கியைப் பயன்படுத்த வேண்டிய நிலை

*பாகுபாடு மற்றும்* துன்புறுத்தல்

- தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பாகுபாடு
    - உ.ம்., உணவு மற்றும் ஆடை வங்கிகளில் போதுமான பொருட்களைப் பெற முடியாதமை மற்றும் தகுந்த வரவேற்பைப் பெறாமை
- வறுமைக்கோட்டிற்குள் வாழும் பெண்கள் மீது ஏனையோர் அனுகூலம் எடுக்கிறார்கள்
- பாலியல்ரீதியான துன்புறுத்தல், துதுன்புறுத்தும் உறவுகள் உட்பட பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்கள்
    - “பாதிக்கப்பட்டவராகுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.”

*மொழித்தடை வறுமையைப் பாதிக்கிறது*

- மொழி தடையாக இருப்பதால் வேலைவாய்ப்புக்களைப் பெறுவது கடினமாகவுள்ளது
- சேவைகள், நிறுவனங்களுக்கான அணுகல் தொடர்பான சவால்கள்
    - “எம்மால் வெளிப்படையாகப் பேச முடிவதில்லை.”
    - “மொழியறிவு அல்லாத ஒருவர் எங்கேயாாவது சென்றால், அவர் ஒதுங்கியே இருக்க வேண்டும் … வைத்தியசாலைகள், வங்கிகள் அல்லது எந்தவொரு பொது இடத்திலும் இருப்பது கடினமாகவுள்ளது”

*பொருள் வறுமையின் களங்கம்*

- குறிப்பாக வீடுகள் தொடர்பாக ஏனையோருடனான ஒப்பீடு; உங்களிடமுள்ளதை விட அதிகமாக செலவிடலை விளைவாக்குகிறது : "மக்கள் ஏழ்மையாக உள்ளதற்கான காரணம் ஒப்பீடு ஆக இருக்கிறது.. ஒரு வீட்டிற்குச் சென்று அவர்களது ஆடம்பர வாழ்க்கையைப் பார்க்கும்போது, ஏளனத்தைத் தவிர்ப்பதற்காக அவர்களைப் போன்றே [அவர்கள்] வாழ விரும்புகிறார்கள். அவர்களால் முடியாவிட்டாலும் கூட, கடன்களைப் பெறுவதால் அவர்கள் வறுமைக்குள் தள்ளப்படுகிறார்கள்."

*குடும்பத்தவர்கள் மற்றும் சிறுவர்களின் வறுமை*

- பிள்ளைகள் கேட்பதை வழங்க முடியாதமை: "இந்த நாட்களில் செலவினம் மிக அதிகமாகவுள்ளது. பிள்ளைகள் விரும்பும் அல்லது நாம் விரும்பும் உணவுகள் எங்களுக்குக் கட்டுபடியாவதில்லை. நாம் பிள்ளைகளை வெளியே கூட்டிச்செல்லும்போது, அவர்கள் எமது வருமானத்தை அறியாமல் எம்மால் முடியாதவற்றைப் பெற்றுத் தருமாறு கேட்பார்கள்."
- சிறுவர்களுக்கான செலவினங்கள் மிக அதிகம்: "பிள்ளைகளுக்கான செலவினங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன"
- சிறுவர் பராமரிப்பு செலவினம் அதிகமாகவுள்ளது மற்றும் ஏனைய செலவினங்களை அது கட்டுப்படுத்துகிறது: "அவர்கள் தமது வருமானத்தில் அரைவாசியை சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்குக் கொடுக்கிறார்கள்."
- சிறுபராயத் திருமணங்கள் நடக்கலாம்: "பணத்திற்காக சிலர் தமது இளைய பிள்ளைகளை வயதான ஆண்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கிறார்கள்."

*ஒற்றைத் தாயாக இருப்பது*

- ஒரு தமிழ் ஒற்றைத் தாயாக இருப்பது மிகவும் சவால்மிக்கது
    - ஒரு தமிழ் ஒற்றைத் தாயாக, பாடசாலையில் பிள்ளைகளுக்காகத் தொடர்புகொள்வது அல்லது அவர்கள் சார்பில்பேசுவது கடினமானதாக உள்ளது: "பாடசாலையில் மிகவும் கடினமாக உள்ளது… அங்கு மொழித்தடை உள்ளது மற்றும் அவர்களை எங்களைப் பற்றி அக்கறைப்படுவதில்லை… மேலும், அங்கு கலாசசாரப் பிரச்சினைகள் உள்ளன, அதன் காரணமாக நாங்கள் சவால்களை எதிர்கொள்கிறோம்."

- தேவைகளைப் பூர்த்திசெய்வதில் சிரமப்படுதல், உ.ம்., கணவனை இழந்த ஒரு ஒற்றைத் தாய்க்கு வழங்கப்படும் தொழிலாளர் இழப்பீட்டு நிதி போதுமானதல்ல.

குடியிருப்பு *வசதி*

- குடியிருப்புகளின் விலை மிக அதிகமாகவுள்ளதால் அஒன்றை வாங்க முடியாதுள்ளது அத்துடன் அதற்கு சேமிப்பதும் இயலுமான காரியமல்ல
- வாடகைச் செலவுகள் மிக அதிகமாக இருப்பதால், ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கான அணுகலை அது கட்டுப்படுத்துகிறது:
    - “நாங்கள் சம்பாதிக்கும் அனைத்தும் அதற்காகவே செலவழிக்கப்படுகிறது அத்துடன்பணத்தை சேமிக்கவோ அல்லது வேறு பொருகளை வாங்கவோ முடியாதுள்ளது.”
    - வரவுசெலவைக்கூட திட்டமிட முடிவதில்லை: “வாடகை மற்றும் ஏனைய கட்டணங்களுக்கு முழு வருமானமும் செல்வதால், பணம் எதையும்  வரவு செலவுத்திட்டத்தில்]… ஒதுக்குவதற்கு எம்மால் முடிவதில்லை [முழுப் பணமும் வாடகைக்கே செல்கிறது.”
    - வெவ்வேறு வகையான சத்தான உணவை வாங்க முடிவதில்லை: “தற்போதய நாட்களில் கறி மற்றும் சீஸ் அல்லது பாண் மாத்திரமே உட்கொள்ள முடியும். அதிக வாடகையைச் செலுத்த வேண்டியிருப்பதாலும், அடிப்படை வருமானத்தைப் பெறுவதாலும், வாடகைக்கு மாத்திரமே உண்மையில் செலவழிக்கக்கிறீர்கள்.”
    - சக்தியற்ற உணர்வு: “எங்களால் என்ன செய்ய முடியும்? நாங்கள் வாடகையை மாத்திரம் செலுத்திவிட்டு, பாணைச் சாப்பிடுகிறோம்.”
- தமக்குத் தேவையானதைவிட பெரிய வீடுகளில் மக்கள் உள்ளார்கள், ஏனெனில் சிறியவற்றைப் பெறுவது கட்டுப்படியற்றதாகவுள்ளது: “சில இடங்களில் தமது பிள்ளைகள் திருமணமாகி வெளியே சென்ற பின்னரும்கூட சிலர் தமது மூன்று படுக்கை அறை கொண்ட வீடுகளை வைத்திருக்கிறார்கள்.”
- வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு வேறு வழியில்லை என்பதால், வீட்டு உரிமையாளர்கள், வாடகைக் குடியிருப்பாளர்களைத் துன்புறுத்துகிறார்கள்:

- ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருப்போர், வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான வாடகையை அதிகரித்துக்கொண்டே செல்கின்றனர்
- அதிக பணம் சம்பாதிப்பதற்காக வீட்டின் அனைத்து அறைகளையும் வெவ்வேறு குடியிருப்பாளர்களுக்கு, வீட்டு உரிமையாளர்கள் வழங்குவதால், உங்களுக்கு மட்டுமான வாடகைக் குடியிருப்பைப் பெறுவது கடினமாகவுள்ளது: "ஒரு நபருக்காக ஒரு அறையை மாத்திரம் பெறுவது கடினமாகவுள்ளது… இரண்டு அல்லது மூன்று படுக்கையறைகள் இருந்தால், அதற்கான கட்டணத்தை செலுத்தி இருக்குமாறும், ஆனால் மற்றொரு அறையில் வேறொரு குடியிருப்பாளர் இருப்பார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். எனவே இந்த நாட்களில் வாடகையை இரட்டிப்பாக்குவதற்காக ஒரு நிலக்கீழ் வீட்டை இரு வேறு குடியிருப்பாளர்களுக்கு அவர்கள் வழங்குகிறார்கள்."

*வேலை*

- அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினத்திற்கு ஏற்ப சம்பளம் அதிகரிக்கப்படுவதில்லை. எனவே வாழ்க்கைச் செலவினத்தைச் சமாளிப்பதற்கு, ஒரு முழுநேர வேலையுடன் மேலதிக வேலையோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளையோ செய்ய வேண்டியுள்ளது:
  - "வீட்டு வாடகை, சொத்து வரி, தண்ணீர்க் கட்டணம், மின் கட்டணம், எரிவாயுக் கட்டணம்… அனைத்துமே கட்டுக்கடங்காமல் போயுள்ளன, அதிகரிக்கின்றதே தவிர குறைவதில்லை. ஆனால் இந்தச் செலவினங்களுக்கு ஏற்றாற்போல் சம்பளங்கள் உயர்வதில்லை. எனவே இரவுப் பணிகளுக்குச் செல்வதுடன். ஒரு நபர் இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது, வழமையில் அவர்களால் நான்கு மணித்தியாலங்கள் மாத்திரமே படுக்கையில் உறங்க முடிகிறது."
  - வாழ்க்கையை மகிழச்சிகரமாகக் கழிப்பதற்கு நேரமில்லை: "வறுமை காரணமாக சிலர் ஏழு நாட்களும் வேலைக்குச் செல்கிறார்கள். கோடை காலத்தைக்கூட அவர்கள் அனுபவிப்பதில்லை."
  - குடும்பத்துடன் செலவிடுவதற்கு நேரமில்லை: "சிலர் நான்கு மணித்தியாலங்கள் மாத்திரமே நித்திரை கொள்கிறார்கள்,

அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், பிள்ளைகளின் முகங்களைப் பார்ப்பதற்குக்கூட அவர்களுக்கு நேரமில்லை, ஏனெனில் பிள்ளைகள் எழுவதற்கு முன்பாக தந்தை வீட்டை விட்டு வெளியேறிவிடுவார், பிள்ளைகள் உறங்கிய பின்னரே மீண்டும் வீடு திரும்புவார். ஒரு குடும்பமாக உணவு உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரமில்லை… வார இறுதியிலும் கூட.”

- கல்வி மற்றும் பயிற்சிக்கு சமத்துவம் இல்லை, எனவே மக்கள் குறைந்த சம்பளம் பெறும் துறைகளில் வேலை செய்கிறார்கள்: “இலங்கையில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் தொழிற்சாலை வேலைகளுக்கும், வைத்தியர்கள் உணவக வேலைகளுக்கும் செல்கிறார்கள்.”
- பயிற்சியை அல்லது கல்வியைப் பெறுவதில் சிரமம்
    - வேலைக்கு வழிவகுக்குமென சுரண்டும் தன்னார்வ வாய்ப்புக்கள். கூறினாலும்கூட அவ்வாறு நடைபெறுவதில்லை
    - கல்வியை அணுகுவதிலுள்ள சவால்கள்
- சில தமிழ் வணிகங்களும் பணியாளர்களுக்குப் போதுமான சம்பளம் வழங்குவதில்லை, ஆனால் “வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால், மக்கள் அங்கு செல்கிறார்கள்… இதற்கு என்ன செய்ய வேண்டுமென எனக்குத் தெரியாது. தமிழ் மக்களும் ஏனைய தமிழ் மக்களை கீழே தள்ளுகிறார்கள் எனத் தோன்றுகிறது.”

*மன ஆரோக்கியம் மற்றும் நம்பிக்கையின்மை*

- வறுமை காரணமாக மக்கள் மன நலமின்மை மற்றும் மன ச் சோர்வை அனுபவிக்கிறார்கள்
- வறுமை மற்றும் கடன் காரணமாக நம்பிக்கையின்மை மற்றும் தற்கொலை: “கடனை மீள ச் செலுத்த முடியாத காரணத்தால் சிலர் தற்கொலை செய்கிறார்கள். அவர்கள் மனச் சோர்வுக்கு உட்படுகிறார்கள்… மற்றும் அவர்களால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடிவதில்லை, எனவே வீட்டில் மனைவி அல்லது பிள்ளைகளின் நிலைமையும் மோசமடைகிறது.
- நம்பிக்கை உடைந்து போகும் தருணங்களில் கூட இதை ஒன்றுசேரப் பிடித்து வைத்திருக்க வேண்டும், ஏனெனில் வெளியேற வழி எதுவும் இல்லை என்பது போல தோன்றும், மற்றும் நீங்கள் செய்யக்கூடிய ஒன்று தொடர்ந்து வேலை செய்ய முயற்சிப்பதே: “"மற்றவர்களைப் போலவே, நாமும் ஆடை அணிய வேண்டும் மற்றும் அனைத்தையும் செய்யவேண்டும், ஆனால் உள்ளே அவர்களின் வாழ்க்கையில்

வறுமைதான் உள்ளது. நாம் இந்த நாட்டிற்கு வந்தோம், ஆனால் நாம் ஒரு இயந்திரத்தைப் போலவே. மக்கள் இங்கு இயந்திரங்களாக இயங்குகிறார்கள்.”

*உணவு*

- உணவுக்கான அதிக விலை: "$100க்கு மளிகைப் பொருட்களை வாங்கும் மக்கள், இப்போது $300 செலுத்துகிறார்கள்."
- பணம் செலுத்துவதைத் தவிர வேறு வழியில்லை: "இது ஒரு கட்டாயத் தேவை."
- உணவு வங்கிகளுக்கான வரம்புகள், எ.கா., காலாவதியான உணவு.

*முதியோர்கள்*

- தமிழ் முதியோர்களுக்கான ஆதரவு குறைவு
- தமிழ் முதியோர்களுக்கு மொழித்தடை  அடிக்கடி அதிகமாக ஏற்பபடுகிறது, ஆனால் மொழிபெயர்ப்புச் சேவைக் கட்டணம் அதிகமாக இருப்பதுடன், சில வேளைகளில் சுரண்டல் தன்மையுடையதாகவுள்ளது.
- முதியோருக்கான முதியோர் இல்லங்கள் மிகவும் விலை உயர்ந்தவை, மக்கள் சில நேரங்களில் மாற்றுத் தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும், எ.கா., முதியோர் இல்லம் மிகவும் விலை உயர்ந்ததாக இருப்பதால், வயதான பெற்றோரை உங்கள் வீட்டில் தங்க வைக்க வேண்டிய சூழல்.

வலுவிழந்தோர் *உதவித்தொகை வீதங்கள்*

- ODSP உதவித்தொகை வீதங்கள் மிகக் குறைவு:
    - குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு: "எனக்கும் என் குழந்தைக்கும் ODSP போதாது."
    - பெற்றோரைப் பராமரிப்பதற்காக: “நான் ஒரு ODSP பெறுநர். என் பெற்றோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றால், என்னால் அல்லது அவர்களால் அந்தத் தொகையைச் செலுத்த முடியாது. ஓய்வூதியத் தொகை கூட மிகவும் குறைவு.

ஆரோக்கியப்பராமரிப்பு

- நிவாரணங்கள் இல்லாவிடில், அல்லது ODSP இல் காப்பீடு செய்யப்படாவிடில் வதைமருந்துகள் மற்றும் ஆரோக்கியப்

பராமரிப்பிற்கான செலவுகள் அதிகம்: “மருந்து வாங்கும் போதெல்லாம், அதன் செலவு வருமானத்தை விட அதிகமாக இருக்கிறது.”

## **உங்களது சமூகத்**துக்கு **எது** உதவியா**க இருக்கிறது?**

*பெண்களின் பலம் மற்றும் திறன்கள்*

- “பெண்களே சமூகத்தின் பலம்.”
  - பெரிய சவால்களை எதிர்கொள்வதில் பலம், ஏனைய ஆதரவில்லாமல் ஒற்றைத் தாயாக இருப்பது, ODSPஇன் உதவியுடன் வாழ்வது, ஒரு காசாளராக வேலை புரிவது.
  - குடும்பத்தை பொருளாதார ரீதியாக நிர்வகிப்பதற்கும் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதற்குமான தமிழ் பெண்களின் பலம்.
- தமிழ் ஒற்றைத் தாய்மாரின் பலம்:
  - “நான் ஒற்றைத் தாயாக இருப்பது அல்லது எனது தாய் ஒற்றைத் தாயாக இருப்பது, நாம் ஒருவரை ஒருவர் பலமான பாதையில் இட்டுச் செல்வது எமக்குள்ள பலம் என நான் நினைக்கிறேன்.”
  - “எமது சமூகத்தில் ஏராளமான ஒற்றைத் தாய்மார்கள் உள்ளனர். அவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்கிறார்கள், அவற்றிலிருந்து மீள்கிறார்கள், அவர்களது பிள்ளைகளை வளர்த்து, சிறந்த கல்வியூட்டி அவர்களுக்கான சிறந்த உதாரணமாக வாழ்கிறார்கள். எனவே இது எமது சமூகத்தின் பலமாகும்.”
- நம்பிக்கை, அறிவு, சுதந்திரம் மற்றும் குழந்தை வளர்ப்பு திறன்: “பெண்கள், ஆண்களை விட அதிக நம்பிக்கையைக் கொண்டவர்கள். சொந்த நாட்டை விட, இங்கே அதிகம் படித்தவர்களாகவுள்ளனர். தமது சொந்தக் காலில் நிற்கின்றனர். தமது பிள்ளைகளை சிறந்த வழியில் கொண்டு செல்வதுடன், அவர்களுக்கு சிறந்த பழக்கவழக்கங்களைப் புகட்டி வளர்க்கின்றனர்.”

*கடின உழைப்பு*

- சமூகம், கடின உழைப்பு, சிக்கனம் மற்றும் விடாமுயற்சி கொண்டது

*பிள்ளைகளின் கல்வி*

- வறுமையான நிலைமைகளிலும் கூட: “இலங்கையில் வறுமையில் இருந்தால் மிக அரிதாகவே அவர்கள் பிள்ளைகளைக் கல்விகற்கச் செய்கிறார்கள். ஆனால் இந்த நாட்டில் … பிள்ளைகளைக் கல்விகற்கச் செய்து, அவர்களை சிறந்த வேலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் தமது பலத்தைக் காட்டுகிறார்கள்… தமது பிள்ளைகளைப் படிக்கவும், சிறந்த வேலைகளைப் பெறவும் அவர்கள் வழிசெய்கிறார்கள்.”

*நம்பிக்கை*

- ஆலய சேவைகள், மதநம்பிக்கை, கடவுளை நம்புதல், உங்களது மனச்சாட்சியைப் பின்பற்றுதல்

*சேவைகள் மற்றும் ஆதரவுகள்*

- “இதுபோன்ற இலவசமான தொண்டு நிறுவனங்கள் [Family Service Toronto இல் VAW திட்டம்].”
- உணவு வங்கிகள் போன்ற இலவச உணவுச் சேவைகள்
- வெவ்வேறு அனுபவத்தை வழங்கி, பின்னர் சம்பளம் வழங்கும் வேலைவாய்ப்புக்களுக்கு இட்டுச்செல்லும் தன்னார்வத்தொண்டுப் பணி வாய்ப்புக்கள்

## அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்…*30*

*வருமானத்தை அதிகரித்தல்*

- வாழ்க்கைச் செலவினத்திற்கு ஏற்றவாறு வருமானத்தை அதிகரிக்க வேண்டும்
- சமூக ஆதரவு மற்றும் ODSP கட்டணங்களை அதிகரிக்க வேண்டும்
- மக்களின் சூழ்நிலைகளை நிவர்த்தி செய்யும் நெகிழ்வுத்தன்மையுள்ள நிவாரணங்கள், உ.ம்., பிள்ளைகளைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு அதிகம் வழங்கப்பட வேண்டும்.

*சிறந்த வேலைவாய்ப்புப் பயிற்சி, உதவி மற்றும் வாய்ப்புக்கள்*

- அதிக வேலை வாய்ப்புக்கள்
- சுய-வேலை வாய்ப்பிற்கான ஆதரவு
- அதிக ஊதியத்தொகை
- குடிவரவாளர்களுக்கான பயிற்சி மற்றும் கல்வி
    - தொழிற்சாலை வேலை போன்ற குறைந்த ஊதியம் பெறும் வேலைகளில் மட்டுமின்றி, மக்களின் சொந்தத் துறைகள் அல்லது

அலுவலக வேலைகளில் இலவச வேலைப் பயிற்சி, பணி அனுபவம் மற்றும் கல்வியை வழங்கல்.
    - பயிற்சியானது புகழ்பெற்ற கல்லூரிகளில் இருக்க வேண்டும், மற்றும்/அல்லது சொந்த நாட்டில் பெற்ற தகுதிகளை அங்கீகரிக்க வேண்டும்.
    - ஆங்கிலத்தைப் புகட்டுவதற்கான பயிற்சிப் பாடசாலைகள்.
    - பயிற்சி இடங்கள் ஒவ்வொரு சுற்றுப்புறத்திலும் இருக்க வேண்டும், எனவே அவை அணுகக்கூடியதாகவும் எளிதாகவும் இருக்கும்.

குடியிருப்பு *நெருக்கடிக்கான தீர்வு*

- குறைந்த, அதிக ஒழுங்குபடுத்தப்பட்ட வாடகை செலவுகள், வகுடியிருப்பு விலைகள் மற்றும் அடமான வீதங்கள் – இவற்றைக் கட்டுப்படியாகக்கூடியதாக இருக்க வேண்டும்.
    - அதிக வாடகை தொடர்பாக நடவடிக்கை எடுப்பது மிகமுக்கியமானது.
    - கட்டணங்கள் மற்றும் சொத்து வரிகள் குறைக்கப்பட வேண்டும்.
- சமூக வீடமைப்புத் திட்டத்திற்கான காத்திருப்புக் காலம் குறைக்கப்பட்டு, அதிக வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்
    - “அரசாங்கம் அதிகமான அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டி, குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு வழங்க வேண்டும்.”
    - வெற்றுக் காணிகளில் கட்டுப்படியாகக் கூடிய சமூக வீடமைப்புக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும்: “அவர்கள் பெருமளவான கொன்டோ கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அதனை அவர்கள் நிறுத்த வேண்டும். அந்த இடங்களில் எமக்கான குடியிருப்புகளைக் கட்ட வேண்டும்.”

*சிறுவர்கள்*

- சிறுவர் பராமரிப்புச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும்
- சிறந்த மற்றும் அணுகக்கூடிய சிறுவர்களுக்கான கல்வி
- சிறுபராயத் திருமணத்தைத் தவிர்த்தல்

*முதியோர்*

- கட்டுப்படியாகக்கூடிய முதியோருக்கான மொழிபெயர்ப்புச் சேவைகளை உறுதிப்படுத்தல்

- கட்டுப்படியாகாக்கூடிய முதியோருக்கான போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்தல்
- முதியோர் வீட்டிலேயே வாழ வழிசெய்வதற்கு PSW கிடைப்பதை அதிகரித்தல்